# 21 ஒரு கருத்துக்கணிப்புக்கு அல்லது நேர்காணலுக்கு ஏற்பாடு செய்தல்

## இலக்கு

*கருத்துக்கணிப்பும் நேர்காணலும் தகவல் திரட்டும் வடிவங்களாகும். இதனால், அவை பா.மொ.க வுக்கும் உயர் மதிப்புடையனவாகும். அவை நம்பத்தகு கூற்றுகளுக்கும் "தகவல்களுக்கும;" இட்டுச்செல்லும், எனினும், அவற்றின் தரம் நேர்காணல் வகையிலேயே வலுவாகத் தங்கியுள்ளது. எனவே, அவற்றை மிகக் கண்காணிப்புடன் கருத்தில் கொள்வது பயனுடையதாகும். இவ்வாறு முயலும் வேளை, அதே நேரத்தில் மாணவர்கள் தம் முதல்மொழியை ஒரு புதிய சூழலில் மற்றும் மிகவும் வேறுபட்ட உருக்காட்டல் முறையில் பயன்படுத்தக் கற்கின்றனர்.*

தரம் 3 - 9

30 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**

முடியுமாயின், கருத்துக் கணிப்புக்கும் நேர்காணலுக்கும் எடுத்துக்காட்டு.

**குறிப்புகள்:**

- கருத்துக்கணிப்பு என்பது, இங்கு வரையறுக்கப்பட்டதன்படி, நேர்காணலை அல்லது வாக்களிப்பினைக் குறிக்கிறது. இதில் தொலைக்காட்சி நுகர்வு அல்லது ஓய்விடங்கள் போன்ற பொருள் பற்றிய மிகவும் குறுகிய அடிப்படையில் உருவாக்கிய வினாக்களுக்குரிய (எ.கா. 20 பேர்களுக்கு) விடைகள் எண்ணிக்கையுடன் பதிவு செய்யப்படும். மறுபக்கத்தில், ஒரு நேர்காணலில், பெருமளவு திறந்த வினாக்களே கேட்கப்பட்டன, அவை நீண்ட மறுமொழிகளுக்கும் அறிக்கைகளுக்கும் இட்டுச்செல்வன. நேர்காணல்கள் பெரும்பாலும் ஒருவர் அல்லது சில பேர்களுடன் மட்டுமே நடத்தப்படும், ஏனெனில் அவை பெருமளவு விரிவான பகுப்பாய்வுக்குட்படுவன.
- கருத்துக்கணிப்புகளின் அல்லது நேர்காணல்களின் பொருள் கொடுக்கப்பட வேண்டும். பொதுவாக, அவை வகுப்பறையில் கலந்துரையாடப்பெற்ற தற்கால சிக்கல்களும் பொருள்களுமாகும். இவற்றுக்கு ஒருவரின் பண்பாடு சார்ந்த மக்களை அவர்களுடைய கைதேர்ந்த கருத்துகளுக்காக அணுகவேண்டும். எடுத்துக்காட்டுகள்: "ஓய்வு நேரம் அன்றும் இன்றும்" அல்லது "குழந்தைப் பருவம் அன்றும் இன்றும்" என்னும் பொருள் பற்றி எங்கள் பெற்றோரை அல்லது பேரன் பேர்த்திமாரை நேர்காணல். "ஓய்வு நேரச் செயற்பாடுகள் இங்கும் பிறந்த நாட்டிலும்" என்னும் பொருள் பற்றி நண்பர்கள் உறவினர்களுடன் தொலைபேசியூடாக நேர்காணல். "இளைய ஆண்கள் பெண்களின் உரிமைகளும் வகிபாகங்களும்" என்னும் பொருள் பற்றி பல்வேறு மக்களை நேர்காணல்.
- கருத்துக்கணிப்புக்கும் நேர்காணலுக்கும் ஸ்கைப் மற்றும் கைப்பேசி தொழில் நுட்பத்தால் விளைந்த புதிய வழிகள் உள்ளன. மேலும் எழுத்தூடான கருத்துக் கணிப்புக்கு மின்னஞ்சல், குறுஞ்செய்தி, முகநூல் ஆகியன கட்டாயம் பயன்படுத்தவேண்டும். இந்த ஊடகங்கள் தங்கள் பிறந்த நாட்டிலுள்ள மக்களை நேர்காணுதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது, அதனைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும்.

---

**நடைமுறை:**

- தங்கள் கருத்துக்கணிப்புகளையும் நேர்காணலையும் நடத்துதற்கு முன்னர் மாணவர்கள் "நெறிமுறை" என்னும் தலைப்புக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர் மாணவர்களின் பொருத்தமான பட்டறிவுகளை வழமையான வகுப்பறைக் கற்பித்தலுடன் (மாணவர்களின் வாக்களிப்பினால் அல்லது வழமையான கல்வி வகுப்பு ஆசிரியர்களுடனான கலந்துரையாடலால் உறுதிப்படுத்தவேண்டும்) இணைக்கக்கூடியவராயுள்ளார்.
- அறிமுகமாக, ஆசிரியர் ஒரு நடைமுறை எடுத்துக்காட்டாக ஒரு மாதிரியை அமைக்கிறார். அதன்படி அவர் ஒரு மாணவனை / மாணவியை ஒவ்வொரு நாளைய கருப்பொருள்கள் பற்றி வேண்டுமென்றே நல்ல மற்றும் பொருத்தக் குறைவுள்ள வினாக்களைத் தொடுக்கிறார். இவை பதிவுசெய்யும் கருவியினால் அல்லது கைபேசியினால் பதிவுசெய்யப்படும் பின்னர் மாணவர்கள் அதனை திரும்பக் கேட்டு வினாக்களை மீளாய்வு செய்து இன்னொரு தடவை மறுமொழி கூறுதற்காக.
- இந்தப் பட்டறிவு பின்னர் பகுப்பாய்வு செய்து கலந்துரையாடப்படும். இது ஒரு நல்ல கருத்துக்கணிப்புக்கு அல்லது நேர்காணலுக்கான காரணியை மேம்படுத்துதற்கு ஒரு வாய்ப்பினை வழங்குவதாக அமையலாம். மாணவர்கள் தாம் நடத்தும் கருத்துக்கணிப்பிலும் நேர்காணலிலும் இக்காரணிகளைப் பின்பற்றவேண்டும்.
- கருத்துக்கணிப்பு பற்றிய ஓர் எண்ணத்துக்கான பின்வரும் படிமுறைகள் தொகுக்கப்பட்டுள்ளன (ஒரு கருத்துக்கணிப்புக்கு, அடுத்த பக்கம் பார்க்கவும்).

## கருத்துக்கணிப்பு எண்ணத்துக்கான படிமுறைகள்

- கருத்துக்கணிப்புக்கான நோக்குகளைத் தீர்மானித்தல் ( நாம் எதனைக் கண்டுபிடிக்கப்போகிறோம்? ).
- பொருத்தமான வினாக்களைக் கண்டுபிடித்தல் (வேறுபடுத்த இரு வகை வினாக்கள்).
  - *தீர்மானிப்பு வினாக்கள்*: கூறத்தக்க விடைகள் உள்ளடக்கிய வினாக்களாக அமையும். (இதனால் ஆவணப்படுத்தவும் பகுப்பாய்வு செய்யவும் எளிமையாயிருக்கும்). எடுத்துக்காட்டு: "நீங்கள் ஜேர்மன் மொழியிலா அல்லது ஆங்கிலத்திலா பேச விரும்புகிறீர்கள்?". இந்த வகை கருத்துக் கணிப்புகளுக்குச் சிறப்பானதாகும்.
  - *திறப்பு வினாக்கள்*: இந்த வகை பல நீண்ட விடைகளுக்கு இடமளிக்கிறது. இது அகன்ற உணர்வூட்டும் பல்வகை தகவல்களை பிறப்பிக்கின்றது, ஆனால் அதன் பகுப்பாய்வு மிகவும் சவாலானது. எ.கா."உங்கள் பார்வையில், பள்ளியில் நாம் எதனைக் கற்கவேண்டும்?". இந்த வகை நேர்காணலில் அடிக்கடி பயன்படுத்தப்படுவது.



- மறுமொழிகளை எவ்வாறு மதிப்பிட வேண்டும் (எண்ணல், சுருக்குதல், விளக்குதல் முதலியன) என ஏற்கெனவே எண்ணியதை கருத்திற் கொள்ளவும். இதற்குக் கட்டாயமாக ஆசிரியரின் அறிவுறுத்தல் வேண்டியதாகும்.
- அத்துடன் நிறைவு எடுத்துரைப்பின் வடிவம் பற்றி கருத்திற் கொண்டு அதனைத் தெளிவுபடுத்துக.
- எப்படி எங்கு வினா விடைகள் நடத்தப்படவுள்ளன (பதிவுக்கருவி, கைப்பேசி முதலியவற்றால் ஒலிப்பதிவு, முதலியன, எழுதப்பட்ட சுருக்கம்). கருத்துக்கணிப்பு இருவரால் நடத்தப்படுவதெனின், மாணவன் / மாணவி 1 வினாக்களைக் கேட்கலாம், மாணவன் / மாணவி 2 அவற்றைப் பதிவுசெய்து ஆவணப்படுத்துவான் / ஆவணப்படுத்துவாள்.
- கருத்துக்கணிப்புக்கு பொருத்தமான ஓர் இடத்தினைத் திட்டமிடல். (கவனக்கலைப்பான்களோ இரைச்சலோ இல்லாமல்).
- கருத்துக்கணிப்புக்கு பொருத்தமான ஆட்களைக் கண்டுபிடித்து கருத்துக்கணிப்பின் சூழல் அதன் தேவை பற்றி அவர்களுக்கு அறிவிக்கவும், அவர்களுடைய பங்களிப்பினை வேண்டவும்.
- 2-3 பேருடன் தேவையெனில் மாற்றப்பட்ட வினாக்களுடன் முன்னோடி ஒன்றினை நடத்தவும்.
- ஏனையவர்களுடன் கருத்துக்கணிப்பினை நடைமுறைப்படுத்தவும், எப்போதுமே பங்கேற்பவர்களுக்கு நன்றி கூறவும்.
- எழுத்தில் கருத்துக்கணிப்புப் பகுப்பாய்வு: எத்தனை பேர் குறிப்பிட்ட வினாக்களுக்கு விடையளித்தனர்? நாம் என்ன கற்றோம்? (தனித்தனி வினாக்களுக்குரிய விடைகளைத் திரட்டவும்) நாம் ஏதாவது புதியதைக் கற்றோமா? பட்டறிவைப் பெற்றோமா? எது உணர்வூட்டுவதாக அல்லது இக்கட்டானதாக இருந்தது? என ஆராய்தல்.
- முன்னரே கலந்துரையாடப்பட்ட வழிகாட்டிகளுக்கிணங்க (10 மணித்துளி நேர ஒரு சிறு எடுத்துரைப்பு அல்லது ஒரு சுவரொட்டியுடன்) முடிவுகள் எடுத்துரைத்தல்.

### நேர்காணலுக்கு மேலும்கூடிய குறிப்புகள் (கருத்துக் கணிப்பை விடக் கடினமானது)

- இங்கு வினாக்கள் நேர்காணப்படுபவரைப் பேச வைக்க முடிந்த அளவு திறந்தவையாகவும் பரந்த முறையிலும் அமைக்கப்பட்டன. நேர்காணல் உரையாடல் தொடர்ந்து நடைபெற, ஒரு சொல்லில் விடையளிக்கக் கூடிய வினாக்களை விடுக்கவேண்டாம். எப்படி, என்ன, எங்கே, எப்போது என்னும் வினாக்களைக் கேட்பது நல்லது. இவற்றில் எவையாவது உணர்வூட்டுவனவாக அமையின் அவற்றைத் தொடர்ந்து ஆய்வு செய்யலாம்.
- நேர்காணலின் போது மறுமொழிகள் எழுதப்படவேண்டும் அல்லது திறவுச் சொற்களில் பதிவுசெய்யப்படவேண்டும். நீண்ட நேர்காணல்களுக்கு சொல்லுக்குச் சொல் எழுதுவது மிகக் கடின உழைப்பாகும். ஓர் எழுத்துருவுக்காக ஒலிப் பதிவுகளினின்று தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளை நிறைவு எடுத்துரைப்பின்போது சிறப்பளிக்கை செய்யலாம்.

II